[19th March 1959

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

SRI A. R. SUBBIAH MUDALIAR : இதைப் பற்றிப் பின்னால் பேசப்படுமா? இந்தப் பேச்சு வெற்றியாகி இந்தத் திட்டம் அமுலுக்கு வருமானால் எத்தனை ஏக்கரா நிலம் பயன் அடையும்?

THE HON. SRI P. KAKKAN : நிச்சயமாகப் பேசப்படும் என்று கனம் அங்கத்தினருக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இரண்டு மாகாண சர்க்காரும் பேசி நல்லதொரு முடிவுக்கு வந்தால் இதனால் 2 லட்சம் ஏக்கரா பலன் அடையும் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI M. K. SOMASUNDARAM : பம்பையாறு மட்டும் அல்ல கேரள ராஜ்யத்தில் ஓடுகிற எல்லா நதிகளையும் பற்றிப் பேசி அவற்றைப் பயன்படும்படியாகச் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : நமக்கு என்ன என்ன நதிகள் பயன்படும் என்று பார்த்துத் தான் அவைகளை உபயோகப்படுத்திக்கொள்ள பேச்சு வார்த்தை நடத்துவது பயன் உடையதாக இருக்கும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : மின்சார விசை இதனால் கிடைக்குமா?

THE HON. SRI P. KAKKAN : மின்சார விசையும் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து இருபத்தேழாயிரம் கிலோவாட் கிடைப்பதாக இருக்கிறது.

Krishna, Pennar rivers

* 810 Q.—SRI A. VEDARATHNAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கிருஷ்ணா, பெண்ணாறு நதிகள் சம்பந்தமாய் நம் அரசாங்கத்திற்கும் ஆந்திர ராஜ்யத்திற்கும் இடையே சமரசம் ஏற்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

(ஆ) அதன் பலன் என்ன?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) There is no question in regard to the Pennar that is under dispute between this Government and the Andhra Pradesh Government. As for the Krishna river, the direction of the waters of this river along with those of the Godavari is under the active consideration of the Southern Zonal Council.

SRI A. VEDARATHNAM : ஆந்திர மாகாணத்திலிருந்து இந்தத் தண்ணீரை நமக்குக் கொடுப்பதற்காக அவர்கள் நம்மிடத்திலிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள். இது சமீப காலத்தில் சாத்தியமாகக் கூடும் என்று அரசாங்கம் கருதுகிறதா?

THE HON. SRI P. KAKKAN : நம்மிடத்திலிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. அப்படி எதிர்பார்ப்பது நல்லது தான் என்று சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே அந்த மாகாண முதன் மந்திரி அவர்கள் தண்ணீர் கொடுத்து உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் சீப் என்ஜினீயர் இதைப் பரிசீலனை செய்து சொன்ன பிற்பாடு ஜோனல் கவுன்சிலில் ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பின்னால் அது கவனிக்கப்படும்.

19th March 1959]

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that this diversion of the Krishna river will solve the Andhra Government's flood problem and our food problem?

MR. SPEAKER : The hon. Member must ask the Andhra Government. How can the Hon. Minister answer this question?

SRI V. K. KOTHANDARAMAN : சார், கிருஷ்ணா நதித் தண்ணீர் சம்பந்தமாக முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது அல்லவா? அவர்கள் அந்தத் தண்ணீரைக் கொடுக்கச் சம்மதிக்கிறார்களா? அந்தத் தண்ணீரைப் பெற இன்னும் எத்தனை வருஷ காலம் பிடிக்கும் என்று சர்க்கார் நினைக்கிறார்கள்.

THE HON. SRI P. KAKKAN : முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மட்டும் அல்ல. ஏற்கெனவே அந்த மாகாண மக்களும் இந்த மாகாண மக்களும் ஒன்றாக இருக்கும்போது, இரண்டு ராஜ்யங்களுக்கு ஒரே சர்க்கார் இருக்கும்போது இப்பொழுது உள்நாட்டு மந்திரியாக இருக்கும் பக்தவத்சலம் முதலியார் அவர்கள் இந்தக் கிருஷ்ணா, பெண்ணார் திட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்ய ஆரம்பித்தார்கள். இது பலவித திட்டத்தைப் பொறுத்திருக்கிறது. நந்திகொண்டா திட்டம், புலிச்சிந்தலாத் திட்டம் என்ற பல திட்டங்கள் இருக்கின்றன. ஜெனரல் கவுன்சில் மூலமாக கிருஷ்ணா, கோதாவரி திட்டத்தை நிறைவேற்ற முயற்சி நடந்து வருகிறது.

SRI S. LAZAR : சார், இந்தத் திட்டத்தைப் பற்றிய முடிவு எடுக்கக் காலதாமதம் ஆவதற்கு முக்கிய காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN : காலதாமதம் ஆகிறது என்று சொல்ல முடியாது. ஆந்திர மாகாண சிப் எஞ்ஜினீயர் இதைப் பற்றி ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். அது பரிசீலனையில் இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் இருக்கிறது. இப்பொழுது இந்தக் கிருஷ்ணா நதியின் தண்ணீர் ஆந்திராவில் உள்ள பல ஜில்லாக்களில் பாய்ந்துகொண்டிருக்கிறது. அதை இந்தப் பக்கம் திருப்பிவிட வேண்டுமென்று சொன்னால் கோதாவரித் தண்ணீர் அவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். இந்தக் கிருஷ்ணா, கோதாவரித் திட்டத்தை அமுலாக்குவது பரிசீலனையில் இருந்து வருகிறது. இதைப் பற்றிக் கேள்வி போடுவதால் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. என்ஜினீயர்கள் நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்த பிறகு ஆந்திர மாநிலத்தில் உள்ளவர்கள் பிரச்னை என்ன எவ்வளவு தண்ணீர் வேண்டுமென்பதை பற்றியெல்லாம் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே இதைப் பற்றிக் கேள்வி போடுவது இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண உதவுவதற்குப் பதிலாக சில சமயங்களில் சங்கடங்களை ஏற்படுத்திவிடும் என்று அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Untouchability

*811 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to the Unstarred question No. 8, placed on the Table of the House on 24th March 1958, whether the decision taken by the Government to broadcast a drama or dialogue over the All-India Radio every month in order to give publicity to the provisions of the Untouchability (Offences) Act of 1955, has since been implemented?